**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**MCOP.No.45/2021- RW-1**

| | |
|---|---|
| Name | திரு.சைதன்யா |
| Father Name | திரு.பார்த்தசாரதி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **19.06.2026.**

**மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

இவ்வழக்கில் முதல் எதிர்மனுதாரர் என்னுடைய மனைவி ஆவார். TN-23-CJ-0937 என்ற வாகனம் விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரரான என் மனைவியின் பெயரில் இருந்தது. விபத்து சமயத்தில் நான் தான் அந்த வாகனத்தை ஓட்டி வந்தேன். இலகுரக வாகனம் இயக்குவதற்கு வாகன ஓட்டுநர் உரிமம் எனக்கு உள்ளது. விபத்து சமயத்தில் TN-23-CJ-0937 என்ற வாகனத்திற்கு பதிவு சான்று, தகுதி சான்று, காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். என்னுடைய அஜாக்கிரதையால் விபத்து நடந்ததாக அவளூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு எதிராக அந்த வழக்கில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு தவறானது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது போல் விபத்து நடக்கவில்லை என்றாலும், என்னுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. விபத்திற்கு நான் தான் முழுக்க முழுக்க காரணம் என்பதாலும், அந்த வாகனத்தின் உரிமையாளர் என்ற முறையில் 1-ம் எதிர்மனுதாரரான என் மனைவியும், வாகன காப்பீடுதாரரான 2-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனமும் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளனர் என்றாலும் சரியல்ல.

**4-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

விபத்து சமயத்தில் நான் தான் TN-23-CJ-0937 என்ற வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தை ஓட்டுவதற்கு எனக்கு முறையான ஓட்டுநர் உரிமமும், அந்த வாகனத்திற்கு செல்லத்தக்க காப்பீடும் அந்த சமயத்தில் இருந்தது. எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த ஆட்டோவின் மீது என்னுடைய மகிழுந்து மோதியதாக நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தவறாக சொல்லப்பட்டுள்ளது. போலிசார் புலன் விசாரணை முடித்து என் மீது

தான் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அந்த வழக்கு தவறானது. நான் ஓட்டிச் சென்ற மகிழுந்துவிற்கு முன்னால் திருமூர்த்தி என்பவர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தாரா என்றால் எனக்கு முன்னால் 15 அடி தூரத்தில் சாலையின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தார். திருமூர்த்தி என்பவர் மது போதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்பது விபத்து சமயத்தில் எனக்கு தெரியாது. பின்னர் விபத்து பதிவேட்டை பார்த்து தெரிந்துகொண்டேன். திருமூர்த்தி என்பவர் மது போதையில் பார்வை மங்கிய நிலையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றதாக நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த ஆட்டோவில் இருந்த மெத்தை போன்ற வடிவம் கொண்ட சீட்டு வேகமாக வலதுபக்கம் பறந்து வந்து நான் ஓட்டிச் சென்ற மகிழுந்தின் இடதுபக்கத்தில் விழுந்ததாக விபத்து சம்மந்தப்பட்ட குற்ற வழக்கு விசாரணையில் போலிசாரிடமோ, நீதித்துறை நடுவர் நீதிமன்ற விசாரணையிலோ சொல்லியிருக்கிறேனா என்றால் போலிசாரிடம் நான் சொன்ன அந்த விவரத்தை அவர்கள் பதிவு செய்யவில்லை. நான் சொல்வது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக நடக்காத சம்பவத்தை முதல் முறையாக இந்த வழக்கில் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சேதாரங்கள் என் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சேதாரங்கள் நான் எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த ஆட்டோவின் மீது மோதியதால் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்காலத்தில் வரக்கூடிய வழக்கிலிருந்து நான் தப்பிப்பதற்காக முன்யோசனை செய்து காவல் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோ, மகிழுந்து, இருசக்கர வாகனம் ஆகியவற்றை புகைப்படங்கள் எடுத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய முழு அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும், எந்த தவறும் செய்யாத திருமூர்த்தி மீது திசை திருப்பி அவர் மீது பழி போடுகிறேன் என்றாலும் சரியல்ல. விபத்திற்கு நான் தான் முழுக்க முழுக்க காரணம் என்பதாலும், அந்த வாகனத்தின் உரிமையாளர் என்ற முறையில் 1-ம் எதிர்மனுதாரரான என் மனைவியும், வாகன காப்பீடுதாரான 2-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனமும் மட்டுமே மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளனர் என்றாலும், 3, 4 எதிர்மனுதாரர்கள் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN
Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.